# ஜா எல பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 16 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 பெப்ரவரி 05 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜா எல பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்குகள் தயாரிக்கப்படுவதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் நிதி மீதி ரூபா 109,962,396 ஆன போதிலும் பிரதான காசேட்டின் பிரகாரமான மீதி ரூபா 109,282,095 ஆனமையால் ரூபா 680,301 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) கைத்தொழிலுக்காக களஞ்சியத்தில் வழங்கப்பட்டிருந்த பொருட்கள்/ பண்டங்களின் பெறுமதியான ரூபா 6,476,244 தொகை, மூலதன

சொத்துக்கள் பழுதுபார்த்தல் கணக்கிற்கு அறவிடப்பட்டு மீள அப் பெறுமதி அக் கணக்கிலேயே செலவில் கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,817,145 பெறுமதியான மூலதனச் செலவினங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 226,286,274 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல் கணக்குகள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தன.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 59,194,758 ஆக இருந்ததுடன் அதற்குரிய துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,904,103 ஆக இருந்தது.

### 1.3.5 தொங்கல் கணக்குகள்

பலவருட காலத்திலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற தொங்கல் கணக்குகளில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு மீதியின் கூட்டுத்தொகை ரூபா 236,425 ஆகக் காணப்பட்டது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 51,052,758 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 51,258,757 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா(000) | ரூபா(000) | ரூபா(000) |
| (i) | வீதவரியும் வரியும் | 31,127 | 40,453 | 34,677 |
| (ii) | வாடகை | 3,774 | 3,938 | 10,434 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,679 | 2,937 | 115 |
| (iv) | ஏனைய வருமானம் | 4,138 | 4,116 | 2,388 |

## 2.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 12,428,410 தொகையானதுடன் இதில் 01 ஆண்டு காலத்திற்கு மேலாக அறவீடுகள் நிலுவையான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 222,469 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் வங்கி நடைமுறைக் கணக்குகளின் ரூபா 109,962,395 தொகையான மீதி அவதானிக்கப்பட்டதுடன் அவ் வங்கிப் பணத்தை குறுங்காலத்திற்கேனும் முதலிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்